ஓம்சபம்.

உ

# SHORT HISTORY OF
# THE SOURASHTRAS
OF
# SOUTHERN INDIA.

தென் இந்தியா சௌராஷ்டிரஜாதியாரின்
சரித்திரசாரசங்கிரகம்.

PUBLISHED

BY

## J. V. BATHRUSWAMY

OF

KUMBAKONAM.

கும்பகோணம்
ஜி. வே. பத்துருசுவாமியினல்
பிரசுரஞ்செய்யப்பட்டது.

KUMBAKONAM:
**Lord Ripon Press**

1903.

உ

தென்னிந்தியா

ஸௌராஷ்டிரஜாதியார்

# சரித்திரசாரசங்கிரகம்.

## பொதுக்குறிப்பு.

இந்தியாவில் பொதுவாக பிர்ம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர, வென்னும் நான்கு பிரிவு ஏற்பட்டிருக்கிறது. இந்நான்கும் தொழிலின்பேரில் ஜாதியைப் பிரிக்கப்பட்டதா—ஜாதியின்பேரில் தொழிலைப்பிரிக்கப்பட்டதா-வென்று யோசிக்கும்போது தொழிலின்பேரில ஜாதியை பிரிக்கப்பட்டதாகத் தோன்றுகிறது.

அதாவது:— ஓதிவைத்தல், ஓதல், யாகஞ்செய்தல், யாகஞ்செய்வித்தல், கொடுத்தல், வாங்குதல், இவ்வாறு தொழிலோடு பிர்ம்ம நிஷ்டர்களா யிருக்கப்பட்டவர்கள் பிராம்மணஜாதியென்றும், அவ்வாறில் ஓதிவைத்தல், யாகஞ்செய்தல், தானம்வாங்குதல் நீங்கலாக மற்றமூன்றுடன் ராஜ்யபாரம் வகிக்கும் தன்மையுள்ளவர்களை க்ஷத்திரியாளென்றும், அம்மூன்றில் தானங்கொடுத்தல், வேதமோதல், நெல்முதலிய பதார்த்தங்கள் சேகரித்துவியாபாரஞ்செய்பவர்களை வைசியாளென்றும், பயிர்த்தொழில் முதலிய பணிவிடை செய்பவர்களை சூத்திராளென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

எக்காலும் இந்நான்கு தொழிலிருந்தே உலகம் விளங்கவேணுமென்பது நிச்சயம். மேற்கண்ட பிரிவுகளினுள்ள பிர்ம்ம நிஷ்டாளாகிய பிராம்மணோத்தமர்களை மற்றமூன்று வகுப்பார்கள் பூஜித்துக் காப்பாற்றி வரவேணுமென்று கண்டிருக்கிறது. அதின்படி பிராம்மண சிரோஷ்டர்களாகிய மகான்களையும், மற்ற கீழ்வகுப்பிலிருந்து பிர்ம்ம நிஷ்டர்களாகி மேற்பட்ட ஆழ்வாராதிமகான்களையும் விசேஷமேன்மைப்படுத்தி கொண்டாடி வருகிறார்கள்.

மேற்கண்ட பிராம்மணவம்ச பரம்பரையிலுதித்து அநேகரின் ஆசாரகடை ஒழுக்கமில்லாத ஹீனவிருத்தியை கைக்கொண்டுவருகிறதும் சிலவகுப்பார்கள் மேற்கண்டமேன்குலத்திற்கடுத்தவரிசையில் அமர்ந்தவர்களென்று எக்கியோபவீததாரணமும், நித்தியகாமானுஷ்டான அபிநயங்களைக்காட்டி மேலாடிவருகிறதும் கலிகாலக்கூத்தாயிருக்கின்றது.

இவையிப்படியிருக்க, நமது மதுரை ஸௌராஷ்டிர கனவான்களில் சிலர்களுடைய தூண்டுதலின்பேரில் பரமசாதுக்களாகிய ஸ்ரீ வில்லிபுத்தூர் கோடிகன்னிகாதானம் மகா-ள-ள-ஸ்ரீ ஸ்ரீநிவாஸதாதாசாரியார், கிருஷ்ணசுவாமி தாதாசாரியார் இவ்விருவர்களால் மதுரையிலும் சென்னையிலும் வசிக்கும் ஸௌராஷ்டிரவிப்ரோத்தமர்களுக்கு உபந்நியசிக்கப்பட்டதென்றுகண்டு 1882-௵த்தில் "ஸௌராஷ்டிரஜன மனோரஞ்சனி" என்கிற ஸௌராஷ்டிரசரித்திரம் ஒன்றை அச்சிட்டு வெளிப்படுத்தினார்கள்.

அச்சரித்திரத்தில் ஸௌராஷ்டிர தேசத்தையும் அங்கிருந்து வெளிப்பட்டு இத்தென்னிந்தியாவில் குடியேறின காரணமும் விஸ்தாரமாகச்சொல்லி, இச்சௌராஷ்டிரர்களுக்குள் பிர்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர, இந்நான்கு வர்ணாசிரமங்களிருக்கிறதாக ஒரு கல்பனை ஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

பிறகு 1891-ம் ௵ ஜனவரி ௴ 17௳ சென்னையில் வர்த்தகநிமித்தமாக சென்றிருந்த மதுரை கனவான்களில் 17-பெயர்கள் இத்தென்னிந்தியா மகாஜனங்களின் பிரதிநிதிகளாக நினைத்துக்கொண்டு ஒரு மீட்டிங்குகூடி "தென்னிந்தியா ஸௌராஷ்டிரசரித்திர" மென்று விஸ்தாரமாக இங்கிலீஷில் அச்சிட்டு வெளிப்படுத்தினார்கள். அதில் ஸௌராஷ்டிர தேச வர்த்தமானங்களும் முந்தி ஆண்டுவந்த அரசர்களுடைய பரம்பரையும், பாஷாவிஷயங்களையும், லிபிவிஷயங்களையும், நம் ஸ்வயஜாதியிலழைக்கும் மரியாதைப்பட்டங்களையும் 1-முதல் 20-வது பாராவரையில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. 21-வது பாராவில் ஆதியில் ஸௌராஷ்டிர பிராம்மணர்கள் வைதீகவிருத்தியிலிருந்ததாகவும், இப்போது நிலைமைக்குத்தக்கபடி வெவ்வேறு தொழிலைச்செய்து வருகிறதாகவும், அவர்களுடைய முக்கியதொழில் விவசாயமென்றும், சிலர் வியாபாரமும் சாயம்போடுவதும் நெசவு தொழிலோடு மதானுஷ்டானத்திற்கு பாதகப்படாமலிருக்கிறார்களென்றும் பட்டுநூல்க்காரர்களென்ற பதத்திற்கு பட்டுசெய்கிறவர்களென்ற அர்த்தமெனவும், சில சமயங்களில் பிசகாய் ஸௌராஷ்டிரர்களை பட்டுநூல்க்

ளாரர்களென்று அழைக்கப்பட்டு வருகிறதென்றும், நியாயமாய் பார்க்கும்பக்ஷத்தில் சேணியர்கள், கைக்கோளர்கள், தேவாங்கிகள், பறையர்கள், செங்குடர்கள், முதலியார்கள், சாலியர்கள், செட்டிகள், பத்மசாலிகள் முதலிய நெசவுகாரர்களுக்கு கூடி பட்டுநூல்காரரென்ற பெயர்பொருந்துமேயல்லது ஸௌராஷ்டிரர்களுக்கு பொருந்தாதென்று சொல்லி பெருமைப்படுத்தப்பட்டிருக்கிறது. இதில் பட்டுநூல்காரர்களென்பதற்கு பட்டுநெய்கிறவர்களென்று அர்த்தமாகுமேயன்றி ஜாதியைக் குறிப்பிட்டதல்லவென்பது யாவர்களாலும் ஒப்புக்கொள்ளத் தக்கதேயாம்.

இந்த பட்டுநூல்காரரென்ற பெயரை மேற்கண்ட ஒன்பது ஜாதியைக்குறிப்பிட்டு ஒன்றாய்த்திரட்டு அவர்களுக்கு பங்கிட்டுக்கொடுக்க முயன்றெழுதிய கனவான்களின் அறியாமையைப்பற்றி மிக்க விசனிக்கத் தக்கதாயிருக்கின்றது.

மேலும் 24-வது பாராவில் நான்கு வர்ணாசிரம பிரிவு உண்டென்றும் நமக்குள் வைசிய சூத்திரர்கள் ஏறக்குறைய எல்லா பட்டணங்களிலும் முக்கியமாய் திருப்பதி, நகரி, நாராயணவனம், ஆரணி, கோட்டார், பழனி, பாளையங்கோட்டை, விளாங்குடி, வீரவநல்லூர், இந்த இடங்களில் வசிக்கிறார்களென்றும், அவர்கள் பணக்காரர்களல்லவென்றும் படிப்பு மட்டென்றும் கண்டிருக்கிறது.

இதில் நம் ஸௌராஷ்டிரர்களுக்கு சூத்திரத் தொழிலாகிய விவசாயத்தொழில் முக்கியதொழிலெ

ன்றும் வைசிய சூத்திர தோற்றங்களுள்ளதாய் சில ஊர்களையுமெடுத்துக்காட்டி அவர்கள் பணக்காரர்கள் அல்லவென்றும் படிப்புமட்டென்றும் கண்டெழுதி விடுத்த தர்மசாஸ்திரபண்டித பிரபுத்தன்மையுள்ள கல்விமான்களாகிய மதுரை 17-கனவான்களுக்கு உண்மை தெரிவிக்கும்படி எழுத்துமூலமாக 1896-ம் வருஷம் பிப்ரவரி மீ 27உ அச்சிட்டகாப்பி தனித்தனியாக அனுப்பினேன். அந்த காப்பியின் நகல்:—

உ

மகா-ள-ள-ஸ்ரீ ______________________ அவர்கள்

பிரியமுள்ள ஐயா,

சென்னை ராஜதானிக் தலைமை உபாத்தியாயராகிய ( Doctor Wilson Esqr. ) டாக்டர் வில்ஸன்துரையவர்கள் நமது ஜாதி, மதம், லிபி, பாஷை, இவைகளைப் பற்றியும் கைத்தொழிலின் தாத்கால நிலைமையைப் பற்றியும் கேழ்வை கேட்டிருக்கின்றார்கள்.

அதில் ஜாதி, பாஷை, லிபி, இவைகளைப்பற்றிய வரையில் சந்தேகமற நம்மவர்கள்வசிக்கும் ஒவ்வொரு ஊரிலுள்ளவர்களும் ஒன்றுசேர்ந்து நிஷ்கரிஷை செய்யவேண்டிய அம்ஸத்தை தாங்களுள்பட 1891-வரு ஜனவரி மீ 17உ கிழமை சனியில் சென்னை பெத்து நாய்க்கன்பேட்டை நயினப்பநாயக்கன்தெரு 84-நெ. வீட்டில்மீட்டிங்குகூடி வெளியிட்ட இங்கிலீஷ் சரித்திரத்தில் நமது ஸௌராஷ்டிர ஜாதியார்களுக்குள் நான்கு வர்ணாசிரமதர்மமிருப்பதாகவும் அதில் வைசிய சூத்திரர்கள் பெரும்பாலும் வசித்துவருகிற சில [illegible]

கிய பட்டணங்களையுங்கண்டு மைத்த யெல்லாபட்டணங்களிலும் வசித்துவருவதாக காணப்பட்டிருக்கின்றது. அதின்படி தங்கள் மதுரையிலாவது வேறெந்த ஊரிலாவது குறிப்பாக இன்னான் பிராமணன், இன்னான் க்ஷத்திரியன், இன்னான் வைசியன், இன்னான் சூத்திரனென்று, தெளிவாக 10-பெயர்கள் வரையிலாவது ஊர், தெரு, வீட்டின் நம்பர், பட்டப்பெயருடன் தெரிவிக்கலாமா அல்லது நம்மவர்களிலுள்ள ஹீனவிர்த்தியைக்கொண்டு திஷ்கரிஷை செய்யப்பட்டதா?

அதின் விபரம் சவிஸ்தாரமாக தங்களுடைய சொந்த அபிப்பிராயம் அதாவது மனச்சாக்ஷியோடு உண்மை விளங்கும்படி ஒருவாரத்திற்க்குள் பதில் எழுதியனுப்புவீர்களென்று நம்புகிறேன்.

1896-ளு பிப்பிரவரிமீ 27உ

ஜி. வெ. பத்துருசாமி
பட்டுநூல் ஜவுளிவர்த்தகம்,
கும்பகோணம்.

இதற்கு அவர்கள் யாதொருபதிலும் எழுதியனுப்பாமலிருந்து விட்டார்கள்.

பிறகு இத்தென்னிந்தியாவில் வசிக்கும் ஸௌராஷ்டிரர்கள் அனைவர்களுக்கும் 1896-ம்ளு ஜூன் மீ 19உ சகலவிபரத்துடன் ஒரு விண்ணப்பஞ் செய்துக்கொண்டேன். அந்த விண்ணப்பத்தின் நகல்:—

உ

## ஸௌராஷ்டிர மகாஜென சபையார் அவர்களுக்கு எழுதிக்கொண்ட ஓர் விண்ணப்பம்.

கனவான்களே,

1. நமது ஸௌராஷ்டிர ஜாதியார்களுக்குள் பிர்ம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்ர, வென்னும் நான்கு வர்ணாசிரம தர்மங்களிருப்பதாக ஸ்ரீவில்லிபுத்தூர் ம-ா-ா-ஸ்ரீ கோடி கன்னிகாதானம் ஸ்ரீநிவாசதாதாசாரியார், கிர்ஷ்ணசுவாமி தாதாசாரியார், இவ்விருவர்கள் பேரால் ஸௌராஷ்டிரஜன மனோரஞ்சனி என்னுஞ் சரித்திரமொன்று அச்சிடப்பட்டு ஷை தாதாசாரியராலேயே எனக்கு ஒரு பிரதியும் கிடைத்தது. அப்போது, அவர்களை நான்கு வர்ணாசிரமங்களின் தர்மத்தைப்பற்றி விசாரித்தபோது சமயோசிதமாய் சில யுக்தி வாதங்களைப்பேசி, முடிவில் அதுவிஷயம் தனக்கு விசேஷமாகத் தெரியாதென்றும், சென்னையிலுள்ள சில கனவான்களுடன் கலந்து வெளிப்படுத்தினதாகவும், உண்மையைத் தெரிவித்தார்.

2. பிறகு மதுரையிலிருந்து சென்னையில் வர்த்தகஞ்செய்யும் அடியிற்கண்ட கனவான்கள் சென்னை பெத்துநாயக்கம் பேட்டை சின்னப்ப நாயக்கர் வீதி 84-நெ. வீட்டில் மீட்டிங்கு கூடினார்கள்.

### அதில் ஹாஜரான மெம்பர்கள்.

மகா-ா-ா-ஸ்ரீ M. அனகிரி Aiyo.
,, M. அளகிரிசாமி Aiyo.

அ    தென்னிந்தியா ஸௌராஷ்டிரஜாதியார்

ம-ா-ா-ஸ்ரீ M. R. M. சொக்க Aiyo.
,, அண்ணன் K. அனுமந்த Aiyo.
,, N. அனுமந்த Aiyo.
,, லகுடுவா குப்ப Aiyo.
,, N. K. குப்ப Aiyo.
,, K. R. நாகாசாமி Aiyo.
,, V. S. நாகசாமி Aiyo.
,, N. S. உமாபதி Aiyo.
,, தொயின்றுமா Royo.
,, T. M. ராமசாமி Aiyo.
,, K. V. சுப்ப Aiyo.
,, K. சுந்தர Royo.
,, N. M. சுந்திரராம் Aiyo.
,, திருவான்திருவாச Aiyo.
,, K. வெங்கிட்டராம Aiyo.

ஆக மொத்தம் 17-கனவான்கள் இத்தென் இந்தியாவில் வசிக்கும் ஸௌராஷ்டிர மகாஜெனங்களின் பிரதிநிதிகளாக நினைத்து அதில் ம-ா-ா-ஸ்ரீ டி. எம். ராமசாமி Aiyo அவர்களுக்கு அக்ராசனங்கொடுத்து மகா-ா-ா-ஸ்ரீ K. V. சுப்ப Aiyo அவர்களை சிகர்டேரியாக நியமித்து, 1891-ஆம் ஜனவரி மீ 17உ சனிக்கிழமையில் மீட்டிங்குகூடி வெளியிட்ட இங்கிலீஷ் பாஷையிலமர்ந்த ஸௌராஷ்டரசரித்திரசந்தேகத்தை நிவர்த்திசெய்து கொள்ளும்பொருட்டு மேற்கண்ட கனவான்களில் சிலர்களை அதுமுதல அநேகந்தபா மேறில் கேட்டும் சரியான மூகாந்திரங்கிடைக்காமலிருந்ததினால் 27-2-96-ல் எழுத்துமூலமாய் ஒருவாரத்திற்

குள் பதிலளிக்கும்படி கேட்டுக்கொண்டேன். மாதம் மூன்றுக்கு மேற்பட்டும் பதில் கிடைக்கவில்லை.

ஷை மீட்டிங்கின் சிகர்டேரியாகிய இப்போது கும்பகோணம் பிர்ம்மன்கோவில்தெருவில் வர்த்தகஞ் செய்யும் மகா-ா-ா-ஸ்ரீ K. V. சுப்ப Aiyo அவர்களை அனேகந்தடவை நேரில் எழுத்துமூலமாக பதில்கொடுக்கவேணுமென்று கேட்டபோதெல்லாம் " பாதி எழுதி ஆய்விட்டது, நாளைக்கு அவசியம் அனுப்புகிறேன் " என்று சொல்வதைத்தவிர சரியான முகாந்திரம் எழுதி கொடுக்கவில்லை.

எழுதிக்கொடுக்க மாட்டேனென்று கண்டிப்பாய் சொல்லாமலிருப்பதே பெரும்பாக்கியமாக நினைத்திருக்கிறேன்!!!

ஷை இங்கிலீஷ் சரித்திரம் 24-வது பாராவில் நமது ஸௌராஷ்டிரர்களில் பிர்ம்ம,க்ஷத்திரிய,வைசிய, சூத்திரர்கள் என்று நான்கு பிரிவுகள் உண்டென்றும், அதில் ஏறக்குறைய எல்லா பட்டணங்களிலும் கிராமங்களிலும் முக்கியமாய், திருப்பதி, நகரி, நாரணவனம், ஆரணி,கோட்டார், பழனி, பாளையம்கோட்டை, விளாங்குடி, வீரவநல்லூர் முதலிய இடங்களில், வைசிய சூத்திரர்கள் வசித்துவருவதாய் பொதுவாக குறிப்பிடப்பட்டிருக்கிறது.

மேற்கண்ட முக்கியபட்டணங்களில் சௌராஷ்டிர பிராம்மணனாக மதிப்பிடக் கூடியவர்கள் இல்லாமலிருக்க மாட்டார்கள். அவர்களில் யாவரேனும் ஒருவர், எங்களூரில் இத்தனை பெயர் வைசியர்களும், இ

த்தனைபெயர் சூத்திரர்களும் இருக்கின்றார்களென்றறிவிக்கவேணுமாயும், மற்ற சேலம், ராசிபுரம், நாமக்கல் வகையரா, மதுரை, திண்டுக்கல், பரமகுடி வகையரா, ஓரையூர், திருச்சினாப்பள்ளி, தஞ்சாவூர் வகையரா, ஐயம்பேட்டை, கும்பகோணம், திருபுவனம், அம்மையப்பன், வாலாஜாபேட்டை, சென்னை, இத்தலவாசிகளில் யாவரேனும் தங்கள் தங்களூரிலுள்ள வைசிய சூத்திரர்கள் இன்னாரின்னாரென்று கண்டுபிடித்திருந்தாலும், அல்லது இனி கண்டுபிடிக்கக் கூடியதானாலும் கூடியசீக்கிரமாக மேற்கண்ட சந்தேகம் நிவர்த்தியாகும்படி செய்வார்களென்றும் கோரலானேன்.

மேற்கண்ட நான்கு வர்ணாசிரமங்களைப்பற்றிய சந்தேகத்தை நம்மவர்கள் ஒவ்வொருவரும் நிவர்த்தி செய்து கொள்ளவேண்டிய தவசியமாயிருப்பதால் அவரவர்கள் மேற்கண்ட விஷயங்களை மீட்டிங்கில் கொண்டுவந்து அபிப்பிராயங்களைவெளிப்படுத்தினால், அவைகளை அச்சிட்டு, எல்லோருக்கு மறிவித்து அதிலிருந்து ஒவ்வொரு ஊர்களிலுள்ள சபையார்கள் செய்துவரும தீர்மானங்களை ஒன்றாய்த்திரட்டி, மறுபடி சகல ஜெனங்களுக்குமனுப்பி அதின்பேரிலுண்டாகும் தீர்மானத்தை இத்தென் இந்தியாவிலுள்ள சௌராஷ்டிர மகாஜெனங்கள் யாவறாறுபெயர்களும் ஆக்ஷேபத்திற் கிடமில்லாமல் அங்கிகரித்து தினே தினே கல்வி முதலிய நாகரீகத்திற்றேர்ந்து விர்த்தி அடைவார்களென்று நம்புகிறேன்.

ஆகையால் மகாஜென சபையார்கள் தயவுசெய்து வர்ணாசிரம சந்தேகத்தைப்பற்றி உண்மையில் எவ்வ

ளவுதெரிந்து முடிவுசெய்யப்படுகிறதோ அந்த முடிவின் நகலொன்று போஸ்டுமூலமாய் அனுப்பவேணுமென்று அநேக வணக்கத்துடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

1896-ஹ ஜூன்மீ 19உ

ஜி. வே. பத்துருசாமி
பட்டுநூல் ஜவுளிவர்த்தகம்,
கும்பகோணம்.

அதற்கும் ஒருவரும் யாதொன்றும் எழுதியனுப்பவில்லை. மேற்கண்டவைகளை உத்தேசித்து இக்குடந்தை மகாமக உத்ஸவகாலத்தில் எல்லா ஊரார்களும் வருவார்களென்றெண்ணி காங்கிரஸ்போல ஒரு மீட்டிங்குகூட பிரயத்தினஞ்செய்து 1897-ம் வருஷ பிப்ரவரிமீ 19உ மீட்டிங்குகூடிப்பேச சில சப்ஜெக்ட்டுகள் குறிக்கப்பட்டன.

அதில் ஸௌராஷ்டிரர்களுக்குள் நான்கு வர்ணாசிரம தர்மமிருப்பதாகச் சொல்லப்பட்டிருப்பதை ஒரு சப்ஜெக்ட்டாககொண்டு வர வேணுமென்று கேட்டுக்கொண்டதில மதுரை மகா-ா-ா-ஸ்ரீ வி. எஸ். கிருஷ்ணஸாமி அய்யரவர்கள் அந்த பிரஸ்தாபமிப்போது எடுத்தால் கலகத்திற்கு ஹேதுவாகுமென்றும் நிரம்பவும் வற்புறுத்திச்சொல்லி தடுத்துவிட்டார்கள். பிறகு அநேக பொது நன்மையான விஷயங்களைப்பேசி முடித்தார்கள். மறுபடி 1898-ம் வருஷ ஏப்ரல்மீ 2உ மதுரையில் ஒருமீட்டிங்கும், 1899-ம் வருஷ மேமீ 31உ சேலத்தில் ஒரு மீட்டிங்கும், 1900-ம் வருஷ பிப்ரவரிமீ 14உ திருச்சிறுப்பள்ளி உறையூரில் ஒரு மீட்டிங்கும் கூட்டப்பட்டு அநேக பொதுநன்மையான விஷயங்கள்

பேசினார்கள். இந்த நான்கு மீட்டிங்கிலும் ஷை நான்கு வர்ணாசிரம தர்மங்களைப்பற்றிய பிரஸ்தாபமில்லாமல் போனபோதிலும் இந்நான்கு ஊர்களில் மீட்டிங்குக்கு வந்திருந்த பல ஊரார்கள் ஒன்றுசேர்ந்து வேற்றுமைக்காட்டாமல் சமபந்தியாக இருந்து விருந்துண்டு வந்த அநுபவமே வர்ணாசிரமபேத கல்பிதமென்பது வெளிப்பட்டது. இத்தியாதி காரணங்களாலும் முன்பின் அநுபவத்தினாலும் நம்மவர்களுக்குள் நான்கு வர்ணாசிரமபேதமுண்டுபோல் கல்பிதஞ்செய்ததானது தகாத காரியமென்றே நினைக்கிறேன்.

மேலும் நம்மவர்களுக்குள் புரோகிதவித்தியாகிய வைதிகத்திலிருக்கிறவர்கள் ஐயா வென்ற பட்டத்தை கைக்கொண்டு ஸ்திரீகளுக்கு வைணவ கச்சமிட்டுகொண்டு மற்றவர்களோடுசேர்ந்தவர்களல்லவென்று தனிமையாகவே இருந்து ஐயா பட்டத்தைவிடுத்து ஐயங்கார் பட்டத்தைத்தழுவி ஸ்வபாஷை விடுத்து தமிழும் தெலுங்கும் பேசைகள் முதல் அநுஷ்டித்துக்கொண்டு ஸ்வஜாதியபிமானமின்றி வேற்றுமைகாட்டி வந்ததின் நிமித்தம் ஷை புரோகித வைதீகதொழிலிலமர்ந்த மற்றுஞ்சிலர் ஸ்திரீகளுக்குக்கச்சமிட்டு ஐயர், ஆசாரி என்றபட்டத்தைக் கைக்கொண்டு வந்தார்கள்.

அவர்களும் முன்கூறிய ஐயங்கார் பட்டத்திலேறியவர்களோடுஞ் சேராமலும் மற்றவர்களோடுஞ் சேராமலும் ஸ்வஜாதியபிமானமின்றி தனிப்பட்டு விளங்கலாயினார்கள்.

அதைவொட்டி அநேகர் ஐயரென்ற பட்டங்களைத் தழுவி ஸ்திரீகளுக்கு ஒருவித கச்சத்தோடு மாற்றிக் கொண்டு வருகிறார்கள். இவ்வகுப்பார்களில் எக்ஞோ பவீதமில்லாமலும் கோத்ர சூத்ராதி கருமங்களில்லாமலும் இத்தென் இந்த்யாவிலொருவிடத்திலுங் காணப்படவில்லை. இதற்குள்ளாக வர்ணாசிரமபேத கல்பிதமெனதைக்கொண்டு பிரித்துகாட்டுகிறதோ தெரியவில்லை.

(இச்சௌராஷ்டிர ஜாதியார் ஒரே வகுப்பாரென்பதில் சந்தேகமில்லை. ஆனால் பெண்களைக் கொடுக்கல் வாங்கல் அந்தந்த ஊருக்குள்ளாகவே விசேஷமாக வைத்துக்கொண்டும் போஜனப் பிரதி போஜனங்களை மாத்திரம் விர்த்திசெய்துகொண்டும் வருகிறார்கள்.)

மேலும் இச்சாதியார் நான்குவர்ணத்தில் எதைச் சேர்ந்தவர்களென்று விசாரிக்கும்போது இச்சாதியர்களுக்கு கர்ப்பாதானம் முதல் உபநயனாதி சமஸ்காரங்களும் கோத்திர சூத்திராதி பிரவரங்களோடு நித்யகர்மானுஷ்டானங்களும் தசராத்ர ஆசௌசம் முதலிய கர்மங்களையும் மந்த்ரவித்தாக ஆதிமுதல் நடந்துவருகிற வழக்கமும் வடதேசத்தை யொட்டிய ஆசார நடை உடைகளையும் பார்க்கும்போது பஞ்சகௌட பிராம்மணர்களில் ஒருவகுப்பார்களென்று தெளிவாய் தெரியவருகின்றது. மேலும் வடதேசத்திலுள்ளவர்களுக்கு மேதா வென்றும் பனர்ஜீ என்றும் ஈவித்த் என்றும், ட்டாக்கர் என்றும், கொட்டடி என்றும் இன்னும் பற்பல பட்டப்பெயர்கள் வழங்கிவருவதைப் போலவே இச்சாதியார்களுக்கும் பூர்வீககாலந்தொட்டு

சவ்வி என்ற பட்டமும் பவுதில் என்ற பட்டமும் ஏற்பட்டு நாளது வரைக்கும் சுவஜாதியர்களுக்குள் அழைத்து வருகிறார்கள்.

இவை யிப்படியிருக்க இந்தேசத்தார்கள் தொழிலையும், வர்த்தகத்தையும், பக்தியையும் உத்தேசித்து செட்டியென்றும் பாகவதர் என்றும் அழைப்பதுமாய் நேர்ந்துவந்திருக்கிறது.

மேற்கண்ட ஐயர், ஐயங்கார், ஆசாரி, சாஸ்திரி, மேதாபனர்ஜி, ட்டாகர்முதலிய பட்டங்களையும் அடியிற்காணும் பட்டங்களையும் ஆலோசிக்கும்பக்ஷத்தில் ஜாதியைக் குறிப்பிட்டதாகத் தெரியவில்லை. ஆரியாவர்த்தத்திலிருந்து வந்தவர்களை ஆரியர் என்று பொதுவாக அழைக்கப்பட்டுவருங்காலத்திலும் ஸ்ரீவைணவ பிராம்மணோத்தமர்களுக்கு, உய்யக்கொண்டான், நம்பிள்ளை, பெரிய வாச்சாம்பிள்ளை, முதலியாண்டான், என்னா[illegible]சான், சொட்டநம்பி, வடக்குத் திருவீதிப் பிள்ளை, என்னும் பல பட்டங்களோடழைக்கப்பட்டு வந்திருக்கிறதாயுந் தெரியவருகிறது.

பிறகு ஆரியரென்றழைக்கப்பட்டவர்களை அய்யரெனத் திருந்தியும் உடையவர் காலத்தில் பஞ்சசம்ஸ்கார மென்கிற—அதாவது—தாபம், புண்டிரம், நாமம், மந்திரம், யாகம், என்கிற ஐந்தைக்காரணமாக வைத்து ஐயங்கர் என்ற பட்டம் ஸ்தாபிக்கப்பட்டிருந்து இப்போது ஐயங்கார் எனத் திருந்திவந்திருக்கின்றதாயிருக்கிறது. இதில் பிராம்மண ஜாதிமுதல் தாழ்ந்த ஜாதி வரையில் பஞ்ச சம்ஸ்காரஞ் செய்துகொண்டு வருகிறார்கள். அதில் சம்மந்தப்பட்ட எந்தவகுப்பார்களும் ஐயங்கார் என்கிறபட்டம் வைத்துக்கொண்டாலும் ஆக்ஷேபிக்க நியாயம் ஏற்படமாட்டாது.

மேலும் சௌராஷ்டிர தேசத்திலிருந்து வந்தவர்களாக நாம் ஒப்புக்கொள்ளும்பக்ஷத்தில் பூர்வீகமாயுள்ள (சுள்வி) யென்ற பட்டமும் பாகவதர் என்ற பட்டமும் கைக்கொள்ள வேண்டியதவசியமாகக் காணப்படுகிறது.

மேலும் இந்தயுகத்தில் பிராம்மணன் எக்ஞோபவீத அடையாளமொன்றே காரணமாக் விளங்குவார்களென்றும் பிராம்மணாதிவர்ணங்கள் சூத்திராளுக்குச் சமானமாக வருவார்களென்றும் ஸ்ரீபாகவதம் 12-வது ஸ்கந்தம் 2-வது அத்தியாயத்தில் சொல்லியிருக்கிறபடி யனுபவித்து வருமிக்காலத்தில் யார் என்ன சொல்லிக்கொண்டாலும், எவர்கள் எப்படி வைத்துக்கொண்டாலும் பெருமைப்பட்டு வருமென்று நினைக்க ஹேதுவில்லையென்றே தோணுகின்றது.

ஆகையால் நமது ஸௌராஷ்டிர கனவான்களில் சிலர்கள் நம்மவர்களுக்குள் வர்ணாசிரமம் நான்காகப் பிரித்தெழுதிவிட்ட சரித்திரக்கதையைக்கண்டு பிரமிக்காமல், அனுசார ஹீனவிருத்தியோடிருக்கின்றவர்களுடனும் ஜாதிப்பிரஷ்டமானவர்களுடனும் கலவாமல், பக்தி சிரத்தையோடு கர்மானுஷ்டானங்கள் இயன்றவரையில் கைக்கொண்டு, ஸ்வஜாதியபிமானத்தோடிருந்து, நமது குழந்தைகளுக்கு கல்வியை விருத்தி செய்யத் தக்கினமுயற்சியைக் கைவிடாமல் ஆசார சீர்திருத்தஞ்செய்துவரவேணுமென்றுகேட்டுக்கொள்கிறேன்.

ஜி. வெ. பத்துருசாமி
பட்டு ஜவுளி வர்த்தகம்,
கும்பகோணம்.

1903-ளு
பிப்ரவரி 1உ

1882-ம்ஷு ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீநிவாசதாதாசாரியர் கிருஷ்ணசுவாமி தாதாசாரியர் பிரசித்தஞ்செய்த ஸௌராஷ்டராஜன மனோரஞ்சனியின் காபி.

---

ஸ்ரீமதேராமாநுஜாயநமஹ.

ஸ்ரீமத்வேதாந்ததேசிகாயநமஹ.

# ஸௌராஷ்டிரஜன மனோரஞ்சனி.

---

இந்த உபந்நியாசம் திருநெல்வேலி ஜில்லா ஸ்ரீவில்லிபுத்தூரில் வசிக்கும் பிரம்மபிதாமஹ ஸ்ரீசைலேசபுரோஹித திருமலைஹேட்டெரும்படி லக்ஷ்மீகுமார ராயகுரு கோடி கன்னிகாதான உபயவேதாந்த ஸ்ரீமான் ஸ்ரீநிவாசதாதாசாரியரவர்களால் மதுரையிலும், சென்னைபுரியிலும் வசிக்கும் ஸௌராஷ்டிர விப்ரோத்தமர்களுக்கு உபந்நியசிக்கப்பட்டது.

இதிஹாசபுராணங்களில் பிரதிபாதிக்கின்ற-௫௬-தேசங்களில் ஸௌராஷ்டிரம் ஓர் தேசம். இந்தஸௌராஷ்ட்ர ராஜ்ஜியம் பூர்வத்தில் மிக செல்வம்பொருந்தியதும் செழிப்புள்ளதும் விஸ்தீரணமுள்ளதுமாயும் இருந்தது. அதாவது, அதன் வடக்கில் குஜராத்தி, ஸிந்து, மார்வாரிதேசங்களும், கிழக்கில் * மேற்கு ராஜஸ்தானமும், மேற்கு மாளவ தேசமும், தெற்கில் நர்மதா, தாமிரநதிகளும், மேற்கில் யவனசமுத்திரமும் இத்தேசத்திற்கு எல்லைகளாயிருக்கின்றன.

இத்தேசத்தின் வடக்கில் ஆரியாவலிமலைகளும்; தெற்கில் விந்தியமலைகளும்; மத்தியில் கிரிநாரி, உஜ்

---

* (மேற்கு ராஜஸ்தானம்=மேற்கு மிதிலை.)

ஜயந்தகிரிமுதலான சிறுமலைகளும்; சப்பிரமதி, மாஹீ ரேவாமுதலிய சிறு நதிகளுமுண்டு.

பூர்வத்தில் இத்தேசம், ௫-இராஜாங்கங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது, ௧. காம்பேயராஷ்டிரம். ௨. காத்தியராஷ்டிரம். ௩. விந்தியராஷ்டிரம். ௪. மிதிலாராஷ்டிரம். ௫. ஆரியராஷ்டிரம். இவைகளில் ஆரியராஷ்ட்ர இராஜ்ஜியம் பெரும்பாகம் மலைநாடாகவும், பாலைவனமாகவுமிருந்தது.

இத்தேசத்தின் சில முக்கியமான பட்டணங்களைக் கூறுவோம். வலபிபுரம், கோஹில்வாரி, ஸௌராஷ்ட்ரநகரி, அனஹல்வாரி, மிதிலாநகரி, சம்பாநகரி, வேதகிரி, உஜ்ஜயந்தநகரி, கந்தி, துவாரகை, ஜம்புவாரி, காத்தியவாரி முதலியவைகளாம்.

௨. இப்படிப்பட்ட சிறந்த தேசத்தின் செல்வத்தைக் கண்டு, அபகரிக்க விரும்பி சமீபதேசத்து அரசர்களான யவனர், பாரசீகர், மிலேச்சர், கிரேக்கர் முதலானோர் சுமார் கலியுகாதி வருஷம் ௩௭௫௨-அதாவது கிறிஸ்து பிறந்த 658-ம் வருஷம் முதல ௫௦௦-வருஷகாலம்வரைக்கும் படையெடுத்துக் கொள்ளையடித்துக்கொண்டுவந்தார்கள். அக்காலங்களிலேயே மேற்கூறிய தேசங்களின் மதகுருக்களும், ஜெயினியர்களும், பவுத்த மதஸ்தர்களும் வெகுவாய் இத்தேசத்தில் பிரவேசித்து, இத்தேசஸ்தர்களின் மதங்களைக் கெடுக்க ஆரம்பித்தார்கள். அதுமுதல் இத்தேசத்தார் தங்களுக்கு நேரிட்ட ராஜ்ஜிய க்ஷோபம்முதலான இடையூறுகளை சகிக்கக்கூடாமையால் தங்கள் பிரியமான

தேசபட்டணங்களைவிட்டு கிராமவாஸிகள்கூட தேசாந்திரம் சென்றார்கள்.

௩. இப்படியே இதற்கு ஸமீபத்திலுள்ள பாஞ்சாலதேசம், மிதிலாதேசம், ஸிந்துதேசம், மாளவதேசம், மஹாராஷ்டிரதேசம், கூர்ஜரதேசம் முதலான தேசஸ்தர்களும் மேற்சொல்லிய இடையூறுகளை ஸஹிக்கமாட்டாமல் தேசப்ரஷ்டாளானார்கள்.

அம்மாதிரியாய் தேசத்தை விட்டவர்கள் மேற்சொல்லிய உபத்திரவங்களில்லாமல் க்ஷேமமாயிருந்த தேசங்களில் உத்தரதேச விந்திய பர்வத ப்ராந்தியம் தென் இந்தியா முதலான பற்பலஸ்தலங்களுக்குச் சென்றுவிட்டார்கள்.

௪. இவ்விதமாய் சென்றவர்களில் சௌராஷ்டிரிய தேசவாஸிகளான பிராம்ம, க்ஷத்ரிய, வைசிய, சூத்திராதிகள் எந்தெந்த பிரதேசம் தற்கால ஸவுக்கியமாய்நேரிட்டதோ அந்தந்தபிரதேசங்களில் குடியேறினவர்களானார்கள். அவர்களுக்கு அங்கேயேஸ்திரமாய் வாஸம்செய்யும்படியாய் நேரிட்டது. பின்பும் யதார்த்தமாய் வந்தவர்களில் சிலர் தென் இந்தியாவில் நின்று வஸிக்கும்படியாயும் நேரிட்டது.

வடராஜ்ஜியத்தில் குடியேறினவர்கள் தங்கள் ஸௌராஷ்டரதேச நடை உடைபாஷைகள் அந்ததேச நடை உடை பாஷைகளோடு ஒத்து இருந்தபடியால் இந்த சாதுர்வர்ணஸ்தர்களும் அந்த தேச சாதுர்வர்ணஸ்தர்களோடு ஒன்றாய்க்கூடி தங்கள் வர்ணாச்ரமதர்மங்களை தவறாமல் நடத்திவருகிறார்கள். அவர்கள்

தங்கள் தேசபாஷை முதலானவைகளை விட்டு அத் தேச பாஷை முதலானவைகளையே அவலம்பித்து இருககிறார்க்ள்.

௫. தென் இந்தியாவில்குடியேறினவர்கள் மாத்திரம் தங்கள் ஸ்வயதேச நடைஉடைபாவனைகள் இந்தத் தேசஸ்தர்களோடு ஒத்திராமையால் அந்தந்த வர்ணஸ்தர்களோடு, கலந்துக்கொள்ளவும் நடவடிக்கைகளை அனுஸரிக்கவும் கூடாமையாய்விட்டது. அப்படியே நாளது வரையில இருந்துக்கொண்டு இருக்கிறார்கள். அப்படியிருந்தும் ஸ்வய பாஷையையும் லிபியையும் நடை உடை முதலான கர்மங்களனைத்தையும் தவறாமல் நடத்திக்கொண்டு வருகிறார்கள். இப்படி மஹா ஸமுத்திரமத்தியில் புசலில் திசைதப்பி அலைகிற கப்பலுக்கு பகவதனுக்கிரஹத்தினால் ஓர்திட்டு அகப்பட்டு அதிலுள்ளவர்கள் அங்கேயே ஸ்திரமாய் நிலைக்கியமுண்டாவதுபோல் இத்தேசத்தில் குடியேறினவர்களை நாளதுவரையில் காப்பாற்றுகின்ற பகவானை நாமனைவரும் துதித்து இப்பாஷை முதலானவைகளை விருத்திசெய்யப் பிராத்திக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

௬. இத்தேசத்தில குடியேறினவர்கள் கிருஷிவாணிஜ்யம் முதலான ஜீவனோபாயம் செய்துகாலக்ஷேபித்துக்கொண்டு வருகிறார்கள். இந்த ஸௌராஷ்டிரியர் மற்றவர்களைப்போலவே தங்கள் தங்கள் வர்ணாசிரம தர்மங்களை ஆசரித்துவந்தும், ஸ்வதேச லிபியை அபிவிர்த்தி செய்யாமையினாலே இப்பாஷை பிரபலமாகவில்லை. ஆகையால், இவர்களை இத்தேசவாசிகளான

ஆந்திர திராவிடாதிகளில் சிலர் பிராம்ஹண - க்ஷத்திரிய -
வைசிய - சூத்திராதிபேதங்களை அறியக்கூடாமையா
யிருக்கின்றார்கள்.

எ. இந்த ஸௌராஷ்ட்டிரிய பிராம்ஹணாள் ஆதி
முதல் வேதோக்தப்பிரகாரம், ஸூத்திரக்காரரின் விதி
யின்படி சோடசகர்மங்களையும் தங்கள் ரிஷிகோத்திரா
திகளோடு ஆசரித்து ஆதிமுதல் இடைவிடாமல் சகர்ம
நிரதர்களாய் சாஸ்திரோதிதப்பிரகாரம் யாதார்த்திய
மாய் நடத்திக்கொண்டு வருகின்றார்கள். அப்படியிரு
க்க, மேற்கூறிய ஸௌராஷ்ட்டியர் வைசிய, சூத்திரர்
களோடு வியாபார சங்கேதத்துக்குள் உட்பட்டதினி
டமாக இவர்களையும் அவர்களோவென்று இத்தேச
ஸ்தர்கள் பிரமிக்கும்படி நேரிட்டதே தவிர வேறில்லை.

ஹிந்து தேசத்தைப் பாராத ஹூணர் அமெரிக்
காவின் தீவுகளைக் கண்டு ஹிந்து தேசமென்று பிர
மித்ததுபோலவே ஸந்தேகமாகிய கொடிய இருளை
ஸௌராஷ்ட்டிய விப்ர என்னும் சூரியோதயத்தால்
போக்கடித்து விதிக்கப்பட்டிருக்கும் சுருதி, ஸ்மிருதி,
புராணாதிகளை எங்கும்பிரசித்தப்படுத்தி ஸௌராஷ்ட்
டியர் வஸிக்கும் ஒவ்வொரு ஸ்தலங்களிலும் தங்கள்
ஸ்வய விதியை மற்ற விப்ரகளைப்போலவே சகல ஜன
ங்களும் அப்பியசிக்கும்பொருட்டு வித்தியாசாலைகளை
ஏற்படுத்தி அபிவிருத்தி செய்வதால் பாஷை பிரபல்
லியமாகும்; அத்தெளிவினால் சாதுர்வர்ண்யத்துக்
குள் இருக்கும் அவாந்தரபேதம் நன்றாய் [illegible]
டும். ஆகையால், ஆதிமுதல் ஸௌராஷ்ட்ரவிப்ராள் த
ங்கள் வர்ணாசிரமதருமங்களை வெளிப்படையாய்ப்பிர

காரம் தங்கள் வசிக்கும் தேசங்களிலுள்ள திராவிடாந்திரவிப்ர சிரேஷ்டர்மூலமாய் நித்தியநைமித்திக கருமங்களை நடத்தி வந்திருப்பதுமன்றி, மதசித்தாந்தங்களையும் பஞ்சாக்ஷர அஷ்டாக்ஷர உபதேசங்களையும் ஆசாரிய புருஷாள் மூலமாய் உபதேசம்பெற்றுக்கொண்டும் வேதவிஹிதப்படி நடத்திக்கொண்டு வருகின்றார்கள். ஆகையால், ஸௌராஷ்ட்ர சாதுர் வர்ணஸ்தர்களும் நிர்ணய சிந்துவில் விதித்திருக்கிறபிரகாரம் நடத்திவருவதில் சிரத்தைபக்தியுடன் அதிக முயற்சியெடுத்துக்கொண்டு நடத்தும்படி கடவுளைப் பிரார்த்திக்கக் கோருகின்றோம்.

அ. ஸௌராஷ்டர மஹாராஷ்டர் கூர்ஜர திராவிடாந்திரர்கள் சமமாக பஞ்சதிராவிடாள் என்று ஸ்ருதிஸ்மிருதி புராணங்கள் பிரதிபாதிக்கின்றன. அப்படிப்பட்டவர்களில் ஒருவராகிய ஸௌராஷ்டிரியஜனங்கள் தென் இந்தியாவில் ஏறக்குறைய இரண்டுலக்ஷம் ஜனங்களுக்கு அதிகமாகவேயிருக்கின்றார்கள்.

மேற்கூறிய சாதுர்வர்ணஸ்தர்களும் ஒன்றுக்கொன்று வியாபார விஷயமான சங்கதிகளைத் தவிர மற்ற விஷயங்களில் யாதொரு சம்பந்தப்படாமலும், தங்கள் குலாசாரத்தை வழுவாமலும் ஸத்ஸாங்கத்தியர்களாய் இஹபர ஸாதகமான பகவதாராதனபராளாய் முக்தியையடையும்படி வழி தேடிக்கொள்ளுவார்கள் என்றும் ஸர்வத்ராள் இதற்கு முயற்சிசெய்வார்கள் என்றும், " ஸர்வேஜநா: ஸுகிநோபவந்து " என்கிற பகவத்வாக்கியப்பிரகாரம் திரிகாலங்களிலேயும் பரமாத்மாவைப் பிரார்த்திக்கின்றேன்.

சுபமஸ்து.

---

1891-ம் ௵ ஜனவரி ௴ 17 ௳ மதுரை கனவான்கள் சென்னையிற்கூடி இங்கிலீஷில் அச்சிட்ட காபியின் மொழிபெயர்ப்பு.

---

## தென் இந்தியாவிலுள்ள "ஸௌராஷ்டிரர்களின்" சரித்திரவரலாறு.

இந்துக்களுள் கர்ண பரம்பரையாய் வழங்கிவரும் கதைகளிலும் அவர்களுடைய பூர்வீககிரந்தங்களிலும் இவ்விந்தியாவில் ௫௬-தேசங்கள் இருந்தனவென்றும் அவற்றுள் "ஸௌராஷ்டிரம்" ஒன்று என்றும் தெரியவருகிறது. இத்தேசமானது கிறிஸ்துபிறந்த ௭-வது நூற்றாண்டில் மிகுசெழிப்பாயும் பிரபலமாயும் இருந்தது. குஜராத்து தீபகற்பத்தின் தென்பாகமும் ராஜபுதனத்தின் மேல்பாகமும் மாளவமும் காம்பே வளைகுடாவுக்கு அருகிலுள்ள கடற்கரைநாடுகளும் இத்தேசத்தில் அடங்கியவையாம். இந்நாட்டில் ஐந்து பெரும்பிரிவுகளுண்டு. இப்பிரிவுகளுக்கு ராஷ்டிரங்கள் என்றுபெயர். அவையாவன:-காத்தியராஷ்டிரம், சாம்போராஷ்டிரம், ஆரியராஷ்டிரம், மிதிலராஷ்டிரம், விந்தியாராஷ்டிரம் என்பவை. இத்தேசத்துப்பட்டணங்களுள் முக்கியமானவை—வலபிபுரம், கோகிலவாடி, ஸௌராஷ்டிரநகரி, அனகல்வாடி, மிதிலாநகரி, சம்பாநகரி, தேவகிரி, உஜயந்தநகரி, நந்தி, துவாரகை, கம்புவாடி என்பவை. சபர்மதி, மாகி, தபதி, நருமதை என்னும் நதிகளால் பாயப்பட்டுள்ளது. வடக்கில் ஆரியவிமலைகளும் தெற்கில் விந்தியமும் இந்நாட்டுக்கு எல்லைகள்.

(2) குஜராத் என்று வழங்கிவருகிற தீபகற்பத்திற்கு அப்பெயர் அங்கிருந்த யாதொரு ஜாதியாரைக் காரணமாகக்கொண்டு ஏற்பட்டது என்பதைக் காட்டிலும் ராஜாங்கசௌகரியத்தை ஒட்டி இடப்பட்டதாகக் காணப்படுகிறது. ராஜபுதனத்தின் மேற்புறத்துக்குத்தான் 'ஹியூன்ஸியாங்' காலத்தில் குஜர் என்று பெயர். அது ஸௌராஷ்டரமாகாது. அதுவேறு. ஸௌராஷ்டரம் வேறு. ராஜபுதனத்தின் வடக்கிலும் கங்கோத[illegible]த்திக்கருகிலும் இருந்[illegible]தர்ஜாதியார் குஜரஜாதியாரை அவர்களிருப்பிடத்திலிருந்து துரத்தி அவர்கள் நாட்டில் குடியேறிய காலத்தில் இக்குஜர்கள் முதலில் தெற்கேபோய் அனகில்வார்பட்டணம், ஈடர், இவைகளில் இருந்ததாகவும் பிறகு கிறிஸ்துபிறந்த ௬௭௨-[illegible]த்துக்கு முந்தி வடக்கே காம்பேவரையில் துரத்தப்பட்டதாகவும் தெரியவருகிறது. அல்லாஉடீன், கில்ஜி, காலத்தில் இந்நாட்டை முதலில் கைக்கொண்ட மகமதிய சேனாவீரனாகிய ஆலப்கான் என்பவன் ஸௌராஷ்டரத்தின் மத்தியிலுள்ள அனகல்வாராவை தன்னுடைய தலைநகராக ஏற்படுத்துக்கொண்டான். டில்லிராச்சியத்திற்கு முதலில் வசப்பட்ட இப்பிரதேசத்துக்குதான் ஆதியில் குஜரத் என்ற பெயர் இடப்பட்டிருக்கவேணுமென்று கன்னிங்ஹாம் துரை நினைக்கிறார். இக்காலத்தில்கூட இத்தீபகற்பத்து ஜனங்கள் தங்கள் நாட்டை குஜராத் என்று சொல்லிக்கொள்ளாமல் சூரத்து என்றும் கத்திவார் என்றும் சொல்லிக்கொள்ளுகிறார்கள். ஜுனகர் ஸௌராஷ்டர ராஜதானி யென்று டர்ரோதுரை சொல்லுகிறார். ஸௌ

ராஷ்டிரஎன்ற பதத்துக்குச் செழிப்பான ராஜ்ஜியம் என்று அர்த்தம்.

(3) ஸௌராஷ்டிர நாட்டையும் அதைச்சார்ந்த நாடுகளையும் பற்றிய சரித்திரத்தை இவ்விடத்தில் எழுதவேண்டியது உசிதம், அதென்னவெனில்:— மகா அலக்ஸாந்தர் இந்தியாவைவிட்டுப்போன பிறகு சந்திரகுப்தன் கிரீக்கலேவர்களாகிய சவிகுலை தோற்கடித்து இந்தியாவிலிருந்து துரத்திவிட்டான். கிறிஸ்து பிறந்த முதல் நூற்றாண்டில் காஷ்மீர்தேசத்தை கனிஷ்கா என்பவர் அரசாண்டார். இவருக்கு முந்திய காலத்தைப்பற்றி யாதொரு விசேஷமும் அறியப்படவில்லை. ஆனால் குருபாண்சலர்காலம் முதற்கொண்டு கனிஷ்கருக்கு அடுத்தவராகிய அபிமன்யு காலம் வரையில் உள்ள ஆ௨௭௬௬-௯௦ காலத்தில் ௬௨-அரசர்கள் இருந்தாகமட்டும தெரிகிறது. அசோகனுக்குப்பின் பட்டத்துக்குவந்த ஜயலோகர் இந்துமதத்தில் நல்ல பக்தியுள்ளவர். மேற்கேயிருந்து திரள்திரளாய் படையெடுத்துவந்த மிலேச்சர்களை அவர் துரத்திவிட்டார். ஜயலோகருக்குப்பின் இரண்டாவது தாமோதர் பட்டத்துக்கு வந்தார். பிறகு இந்தியாவைஜயித்த அன்னியர்கள் அரசாண்டார்கள். கனிஷ்கர்காலம் முதற்கொண்டு உஜ்ஜனி விக்கிரமாதித்தன் காலத்துக்குச் சரியாய் அரசாண்டமாதிரி குப்தன் காலம்வரையில் ௧௧-அரசர்கள் செங்கோல் செலுத்தினார்கள். இவர்களுள் நர, அபிமன்யு, வசுனந்த, கோகரண், பிரதாபதித்திய, சந்திமதி, சிரேஷ்டசேன, என்பவர்கள் பெயர்பெற்ற அரசர்கள், இதுவரையில் சொல்லியது காஷ்

மீரத்தைப்பற்றியது. குஜராத்தைப்பற்றியவிஷயம் எப்படி என்றாலோ:— ஸாஹ அரசர்கள் என்று பட்டம் கொண்ட ஒருபரம்பரை இத்தேசத்தை ஆண்டுவந்தது. இவர்களுக்கு ஸௌராஷ்டிர ஸாஹ அரசர்கள் என்று பெயர்.

| | | | |
|---|---|---|---|
| (1) | நகபன. | (13) | வீரதாமன். |
| (2) | உஸவதத்த. | (14) | ஈசுவரதத்த. |
| (3) | ஸ்வாமிசாஸ்டன. | (15) | விஜயஸாஹ. |
| (4) | ஜயதாம. | (16) | தாமஜதஸ்ரீ. |
| (5) | ஜீவதாம. | (17) | ருத்ரஸாஹ. |
| (6) | ருத்ரதாமன். | (18) | விசுவஸிம்மன். |
| (7) | ருத்ரஸிம்மன். | (19) | அத்திரிதாமன். |
| (8) | ஸ்ரீஸாஹ. | (20) | ருத்ரஸிம்மன். |
| (9) | ஸங்கதாமன். | (21) | அஸதாமன். |
| (10) | தாமன்ஸாஹ. | (22) | ஸ்வாமிருத்ரஸாஹ. |
| (11) | யசதாமன். | (23) | ஸ்வாமிருத்ரஸாஹ. II. |
| (12) | தாமஜதஸ்ரீ. | | |

(5) இவர்களைப்பற்றிய அதிவிசேஷமான சிலாசாஸனமானது கிர்னருக்கு அருகேயுள்ள ருத்திரதாமன் பாஸத்தில் இருக்கிறது. ஆனால் நாஸிகையிலுள்ள ஓர் மலைக்குகையில் இருக்கும் சிலாசாஸனத்தால் ஆந்திரவம்சத்தைச் சேர்ந்தவனாகிய கௌதமி புத்திரன் என்பவன் ஸௌராஷ்டிரம் கச்சம் முதலிய தேசங்களை ஜயித்து க்ஷஹரதர் என்ற ஒரு ஜாதியாரைக் கருவறுத்ததாகத் தெரியவருகிறது.

(6) கிறிஸ்து பிறக்குமுன் உகூ-ஆம் முதல் கிறிஸ்து பிறந்து சரு0-ஆம் வரையில் இந்தியாவில்

கீர்த்தியுடன் அரசாண்டவர்கள் ஆந்திரர்கள். இவர்கள் அதிகாரம் வெகுதூரம் பரவியிருந்தது. கிருஸ்து பிறந்த முதல் நூற்றாண்டில் இவர்கள் ஸௌராஷ்டரத்தை இழந்துவிடவே அது பிறகு கொஞ்சகாலத்துக்குள் கௌதமிபுத்திரருடைய ஆளுகையில் வந்தது. ஆந்திரவம்சத்தார் ஸாஹவம்சத்தாரை ஜயித்தவிஷயத்தைப்பற்றி வெகுவிவாதங்கள் இருந்துகொண்டிருக்கிறபடியால் அதை விவரிக்கப் புகுவதில் பிரயோசனமில்லை. குப்தர்கள் வம்சத்தில் உதித்த ஸகந்தகுப்தன் தன்னுடைய அதிகாரத்துக்கிழ்ப்பட்ட ஸௌராஷ்டர தேசத்தை ஆளுவதற்கு பர்ணதத்தன் என்பவனை சிற்றரசனாக நியமித்தான். குப்தவம்சத்தில் இவருக்குப் பிற்பட்டு பெரிய அரசர்கள் கிடையாது. பாஹியான் சரித்திரத்தால் இந்தராச்சியத்தை வல்லபிகள் கொஞ்சக்காலம் ஆண்டுவந்ததாக தெரிகிறது. குப்தர்களின் கீர்த்திகுறைந்து மங்கியகாலத்தில போரில் வல்லபனும் அஞ்சாமனமுடையவனுமாகிய சேனாபதிபத்தர்க் என்பவன் குஜராத்தைப்பிடித்தது தன்ஸ்வயாதீனத்தை வற்புறுத்தி ஸௌராஷ்டர வல்லபி வம்சத்தை ஸ்தாபித்தான்.

(7) அரசர் ஒருவரும் இல்லாமல் குழப்பமாயிருந்த ஓர் காலத்தில் ஜனங்கள் மகமதியர்களின் அடிக்கடி படையெடுப்பினாலும் கொடுமையினாலும் தங்கள் சுகவாஸ ஸ்தலங்களைவிட்டு சிலர் வடக்கிலும் சிலர் தெற்கிலும் போனார்கள். வடக்கே சென்றவர்கள் தங்கள் ஜாதிவர்ணாசிரமங்களையும் சுவபாஷையையும் முற்றிலும் விட்டுவிட்டு தாங்கள் குடியேறிய நாட்டி

ளுள்ளவர்களின் சமயாசாரங்களையும் பாஷையையும் தழுவி வேறுபாடின்றி அவர்களுடன் கலந்து விட்டார்கள். இவ்வொற்றுமைக்குக் காரணமெல்லாம் இவ்விருவர்களுடைய பாஷையாசாரங்களின் ஒற்றுமையே. தெற்கேபோனவர்களோ இப்படியல்ல. தெற்கேயுள்ள திராவிடர்களின் பாஷை யாசாரங்களும் இவர்களுடையதுகளும் வெகு வித்தியாசமுள்ளதாகையால் அவர்களுடன்கலக்கமுடியாமல் தங்களுடைய பாஷையையும் ஆசாரங்களையும் இன்றுவரைக்கும் அநுஷ்டித்துக்கொண்டு வருகிறார்கள்.

## பாஷையும் எழுத்துகளும்.

(8) கிருஸ்துபிறக்குமுன் ௩-வது நூற்றாண்டில் வட இந்தியாவில் வழங்கிவந்த பாஷையையும் அதன் எழுத்துக்களையும் நன்றாய் அறிவதற்கு அசோகனுடைய சிலாசாஸனங்கள் வெகு உபயோகமானவை. இவற்றினால் ஹிமயமலை முதல் விந்தியை வரைக்கும் சிந்துநதி முதல் கங்கைநதிவரைக்கும் உள்ள வடநாட்டில் ஒரேபாஷைதான் பேசப்பட்டுவந்ததென்று தெளிவாய் விளங்குகின்றது. ஆனால் சிலவிடங்களில் சிலவித்தியாசங்கள் ஏற்பட்டபடியால் பூர்வசரித்திரம் விசாரணைசெய்பவர்கள் ஷை காலத்தில் வழங்கிவந்த பாஷையை ௩-விதமாய் வகுத்திருக்கிறார்கள். வடமேற்கில் வழங்கியதை பஞ்சாபி என்றும் கிழக்கில் வழங்கியதை மகதி என்றும் மத்தியப்பிரதேசத்தில் வழங்கியதை உஜ்ஜனி என்றும் கனிங்ஹாம்துரை சொல்லுகிறார்கள்.

(9) இம்மூன்றினுள்ளும் பஞ்சாபி ஸம்ஸ்கிருதத்துக்கு வெகு ஒற்றுமையுடையது. உஜைனி பாஷையில் ர, ல க்கள் உண்டு, ஆனால் மகதியில் ரகரம் இல்லாதபடியால் ர உள்ள இடங்களிலெல்லாம் ல உபயோகப்பட்டு வருகிறது. மகதர்கள் ராஜா என்னும் வார்த்தையை லாஜாவென்றும், தசரதன் என்பதை தசலதன் என்றும் சொல்லுவார்கள்.

(10) இவ்வாறு வடக்கேயெங்கும் வழங்கிவந்த பாஷையை புராதனவிஷய விசாரம் செய்பவர்கள் பாலீயென்று சொல்லுகிறார்கள். பிரின்ஸெப்துரை இப்பாஷையை ஸம்ஸ்கிருதம் பாலி இவ்விரண்டிற்கும் நடுப்பட்டபாஷையென்று சொல்லுகிறார். சென்ற 4000-வருஷங்களில் வடக்கேவழங்கிவந்த பாஷையானது அனேக வேறுபாடுகளையடைந்திருக்கின்றது. வேதப்பிராதான்யகாலத்தில் ரிக்வேத ஸம்ஸ்கிருதமும், இதிகாஸப்பிராதானியகாலத்தில் பிராம்மணங்களின் ஸம்ஸ்கிருதமும் தத்துவவிசாரணைகாலத்திலும் பவுத்தமதக்காலத்திலும் பாலி பாஷையும் பௌராணிகப்பிராதானியகாலத்தில் பிராகிருதமும் பத்தாவது நூற்றாண்டில் ராஜபுத்திரர்கள் உற்பத்திக்குப்பிறகு ஹிந்திபாஷையும் முறையேவழங்கிவந்திருக்கின்றன.

(11) விக்கிரமார்க்கனுடைய சபைக்கு பூஷணமாக விளங்கின நவமணிகளில் ஒருவராகிய வரருசி என்பவர் பிராகிருத பாஷைகளுடைய லக்ஷணங்களை முதலில் விவரித்தவர். அவர் பிராகிருதபாஷைகளை நான்குபிரிவுகளாகவகுத்திருக்கிறார். அவைகளாவன:- மகாராஷ்டரி, ஸமஸ்கிருதத்தில் இருந்துவந்த சுத்த

ஸௌராஷ்டிரமான ஸௌரஸேனி, ஸௌரஸேனியிலிருந்து உத்பத்தியானதாகச் சொல்லப்படுகிற பைசாசி, மகதி, ஆக நான்கு பௌத்தர்களின் புண்ணியபாஷையாயிருந்து ௲-வருஷங்களுக்கு மேற்பட்ட காலமாய் பேசும்பாஷையாய் இருந்த பழமையான பாலிபாஷையிலிருந்து கிரமேண இந்தப் பிராகிருத பாஷைகள் வழக்கத்துக்கு வந்தன. புத்தசமயம் சீர்குலைய ஹிந்துமதம் மேன்மையடைந்ததற்கு காரணமான மதவிஷயங்களும் ராஜாங்க சமாசாரங்களும் பாலிபாஷைக்குப்பதிலாக ஷை பாஷைகளை வருவித்தனவென்று நிச்சயமாய்ச் சொல்லும்படியாய் இருக்கிறது.

(12) மேற்சொன்னது பாஷையைப்பற்றியது. இனி எழுத்துக்களைப்பற்றிப் பேசுவோம். சம்ஸ்கிருத பாஷை இப்போது எழுதப்பட்டுவருகிற தேவநாகரி எழுத்து கொஞ்சகாலத்துக்கு முந்திதான் உத்பத்தியானது. கிருஸ்துப்பிறக்குமுன் ௩-வது நூற்றாண்டில் அசோகனுடைய சிலாசாஸனங்களில் வரையப்பட்டிருக்கிற எழுத்துக்கள்தான் நமக்குத்தெரிந்தமட்டில் இந்தியாவின் புராதன எழுத்துக்களாக மதிக்கவேண்டியிருக்கிறது. இச்சிலாசாஸனங்களில் இருவகையான எழுத்துக்கள் உண்டு. ஒருவகை எழுத்து அராபி பார்சியன் பாஷைகளைப்போல வலமிருந்து இடத்துக்கும் மற்றொன்று தேவநாகரி ஐரோப்பியபாஷை எழுத்துக்கள் இவைகளைப்போல இடமிருந்து வலதுக்கும் எழுதப்பட்டிருக்கின்றன. முதலில் சொல்லியதற்கு ஆரியனோபாலியென்றும் ௨-வதுக்கு இந்தோபாலி

யென்றும் பெயர். பின்சொல்லிய மாதிரியாகத்தான் அசோகன் காலத்தில் ஏற்பட்ட சிலாசாஸனங்கள் அநேகமாய் எழுதப்பட்டிருக்கின்றன.

(13) ஆரியகோபாலி அக்ஷரங்கள் இந்தியாவில் உத்பத்தியானவை அல்ல. இந்தியாவிலும் மேற்குக் கோடிப்பிரதேசங்கள் தவிற மற்ற இடங்களில் வழங்கினதாகவும் தோற்றவில்லை. இந்தியாவுக்கு அன்னியர்களான பினீஷியன் ஜாதியாருடைய பாஷைக்கு ஷைபாஷை ரொம்பவும் ஒத்திருப்பதால் இந்தபாஷை இந்தியாவில் உத்பத்தியானதல்லவென்று தாமஸ் துரை சொல்லுவது சரியாய்த் தோற்றுகிறது.

(14) ஆனால் இந்தோபாலி அக்ஷரங்களைப்பற்றி அவைகள் இந்தியாமுழுமையும் வழங்கினபடியால் இது இங்கேயே சங்கேதப்படுத்தப்பட்டு வியாபித்திருக்கவேணுமென்று தாமஸ்துரை நிச்சயமாய்ச் சொல்லுகிறார்.

(15) கனிங்ஹாம் ஜெனரலும் தாமஸ்துரை அபிப்பிராயப்படியே இந்தோபாலி அக்ஷரங்கள் இந்தியாவில் உத்பத்தியானவை என்றே நிதானிக்கிறார்.

(16) பூர்விக ஸௌராஷ்டர அக்ஷரங்கள் தேவநாகரி அக்ஷரங்கள் மாதிரியே இருப்பதுமன்றி வீட்டில் வழங்கும் வார்த்தைகளும் ரூபவேறுபாடுகளில் ஸம்ஸ்கிருத வார்த்தைகளை ஒத்திருக்கின்றன. ஸௌராஷ்டர எழுத்துக்கள் ஸம்ஸ்கிருதத்திலிருந்து உண்டானவை யென்றாலும் ஸமஸ்கிருதத்தில் இல்லாத சில எழுத்துக்கள் அந்தபாஷையில் உண்டு. ஸம்ஸ்கி

ருதத்தில் எ, ஒ, குறில்கள் கிடையாது. ஆனால் ஸம்ஸ்கிருதத்திலுண்டான எந்த பாஷையிலும் அந்த எழுத்துக்கள் உண்டு. அப்படியே ஸௌராஷ்டிர பாஷையிலும் எ, ஒ, குறில்கள் உண்டு. அவைகளின் ரூபங்கள் பின்னடி மாறுதலடைந்திருக்கின்றன.

## நூல்கள்.

(17) பாஷாபரிசீலன லக்ஷணங்களைப்பற்றி பிரான்ஸிஸ்பாப் எழுதி ௫௭-ஞு காலமாகியும் இவ்வளவு நீடித்தகாலத்தில் மற்றபாஷைகளின் ஆராய்ச்சி மிக ஆவலாய் நடந்திருக்க ஐந்துலெட்சம் ஜனங்களால் பேசப்படுகிற இந்தபாஷை கொஞ்சமேனும் இந்தப் பத்தொன்பதாம் நூற்றாண்டில்கூட பரிசீலனை பண்ணப்படாதது ஆச்சரியமாயிருக்கிறது. வட இந்தியாவிலுள்ள மற்ற பிராகிருத பாஷையைப்போல் ஸௌராஷ்டிர பாஷையிலும் நல்லநூல்கள் உண்டு. ஆனால் ஹிந்தி, மராடி, குஜராத்தி, பங்காளி, ஒட்டரம், இப்பாஷைகளைப்போல அதற்கு இலக்கணநூல இல்லை. இவ்விலக்கண நூல்கள் இல்லாததற்கு காரணம் என்னவெனில்:—இப்பாஷைகள் ஸம்ஸ்கிருதத்திலிருந்து நேராயாவது பிராகிருத வழியாகவாவது உண்டாயிருக்கிறபடியால் இவற்றிற்கு லெட்சணம் எழுதுவதில பிரயோசனமில்லையென்று அவ்விடத்திலுள்ள வித்வான்கள் விட்டுவிட்டார்கள் என்று யூகிக்கவேண்டியதாயிருக்கிறது பிராகிருதபாஷைகளாகிய மகாராஷ்டிரம் ஸௌரஸேனியென்ற ஸௌராஷ்டிரம் இவைகளுக்கு வியாகரணம் பூர்வீகரிஷிகளால் எழுதப்பட்டிருந்தபோதிலும் இந்தப்பெயர்கள் வழங்கும் நாடுக

வில் பேசப்படும் பாஷைகளுக்கும் அந்த வியாகரணங்
களுக்கும் யாதொரு சம்மந்தமுமில்லை.

(18) இந்தப் பிராகிருத பாஷைகள் நாடகங்கள்
நிமித்தமாகத்தான் ஏற்படுத்தப்பட்டனவென்றுபுரோ
பெஸர் வில்ஸன் சொல்லுகிறார். ஆனால் புரோபெஸர்
லாஸென் என்பவர் இவ்வபிப்பிராயத்தை மறுதளித்து
பழமையான பிராகிருதபாஷைகள் மருவி இப்போது
வழங்கிவரும் பாஷைகளாகமாறினதாக சொல்லுகிறார்.
ஸௌராஷ்டிரர்கள் ஆரியர்களே. இது அவர்களுடைய
பாஷை ஆசாரங்கள் நடை உடைகளால் நன்றாய் வி
ளங்குகின்றது. இந்தியாவில்வழங்கிவரும் எந்தபாஷை
யையும் நன்றாய் அறிந்து கொள்வதற்கு வரருசி, ஹே
மசந்திராசாரியார், இவர்கள் எழுதியபிராகிருதப்பிர
காசத்தை முதலில் படிக்கவேண்டியது அவசியம்.
ஸௌராஷ்டிரர்களில் பெயர்பெற்ற வித்துவான்கள்:-
பதஞ்சலி, பிங்களாசாரியார், ஹேமசந்திராசாரியார்,
வாலமீகி, தண்டி, பவபூதி, காளிதாஸன், முதலியவர்
கள். பாரத, பாகவத, ராமாயண புராணங்களும், வை
த்திய, ஜோதிட, மந்திர நூல்களும் அவர்களுடைய
பாஷையில் இருக்கின்றன.

## ஏற்பாடுகள்.

(19) ஸௌராஷ்டிரர்கள் தெற்கே குடியேறிய
போது தங்களுடைய அநுஷ்டானங்களையே கொண்
டாடினாலும் திராவிடர்களுடைய விசேஷப்பழக்கத்தி
னல் சில அநுஷ்டானங்கள் மறந்துபோயின. இடம்
விட்டு இடம்பெயரும காலங்களில அவர்கள் தங்களு

க்குத் தலைவர்களை நியமித்துக்கொண்டார்கள். இந்த ஜாதியார்களில் நாலுவகைப்பிரிவுகள் உண்டு, கொமுண்டான் (தலைவர்கள்), சள்வின் (பெரியோர்கள்), வைத்துன் (வைத்தியர்கள்), பௌதல் (வைதீகர்கள்).

(20) ஷை ஏற்பாடுகள் இப்போது அற்றுப்போயும் கொமுண்டானென்னுந் தலைவர்கள் மாத்திரம் சிலவிடங்களில் இருக்கிறார்கள். ஷை கொமுண்டா பட்டதாரிகள் தங்களுக்குக் கீழ்ப்பட்ட மனிதர்களுடைய செய்கைகளுக்குத்திரவாதிகளாக இருந்தார்கள். மனுஸ்மிருதியில சொல்லிய அவிபக்த ஹிந்துகுடும்ப ஏற்பாட்டின்படி ஜனங்கள் தங்களுடைய சொத்துக்களை அனுபவித்து வந்தார்கள். ஷை தலைவர்கள் ஸீவில் கிரிமினல் விஷயங்களில் நியாயாதிபதிகளாக இருந்தார்கள். வழக்குகளைத்தீர்ப்பதில் அவர்கள் சள்வின் என்ற பெரியோர்களால் உதவிபெற்று வந்தார்கள். மதுரை ஜில்லாவில் கொமுண்டாப் பட்டம் வம்சபாரம்பரையாய் இருக்கிறது. ஆனால் மற்றவிடங்களில் அது ஜனங்களுடைய நியமனத்தைப் பொருத்ததாயிருக்கிறது. சள்விகளின் உத்தியோகம் ஜனசமூகத்தைப்பற்றிய எல்லாவழக்குகளையும் விசாரித்து தலைவர்களுக்குத் தெரிவித்து அவர்களின் தீர்மானத்தை அனுசரித்து நடந்துவருகிறது. வைத்துன் (பண்டிதர்கள்), பௌதல் (ஜோஸியர்கள், கவிகள்), காரியஸ்தர்கள் ஆகிய இவர்கள் விசேஷகாலங்களிலெல்லாம் மரியாதைபெற்று பெரியோர்களான சள்விகளின் அந்தஸ்த்தைப் பெற்று வந்தார்கள், மற்றஜனசமூகம் முழுமைக்கும் குடிகளென்ற பெயர். ஜாதிப்பிரஷ்டம் பண்ணுதல்,

திரும்ப ஜாதிக்குள் ஏற்றுக்கொள்ளுதல், அப்போதப் போது சேரும் ஜனசமூகசபை இதுகளில் ஷை குடி ஜனங்களின் அபிப்பிராயம் அவசியமாயிருக்கிறது. இப்போதிய தொமுண்டாக்களுக்கு மதசம்மந்தமான சில விஷயங்களில் தவிர வேறு விஷயங்களில் அதிகாரமில்லை.

## ஜீவனோபாயம்.

(21) ஸௌராஷ்டிர பிராமணர்கள் ஆதியில் வைதீகவிர்த்தியைமட்டும் அனுசரித்து வந்தார்கள். இப்போது தங்கள் நிலமைக்குத்தக்கபடி வெவ்வேறு தொழில்களை அனுஷ்டித்துவருகிறார்கள். அவர்களின் முக்கியதொழில் வியவசாயம். ஆனால் சிலர் வியாபாரம் செய்துகொண்டும் சாயம் போட்டுக்கொண்டும் நெசவுத்தொழில் செய்துகொண்டும் இருக்கிறார்கள். அப்படியிருந்தும் அவர்களின் தொழில்கள் எவ்விதத்தில் ஆவது அவர்களின் மதக்கோட்பாட்டையாவது அனுஷ்டானத்தையாவது பாதிக்கவில்லை. பட்டுநூல்கார் என்ற பதத்துக்கு பட்டுநெய்பவர்கள் என்று அர்த்தம். அது சிலசமயங்களில் பிசகாய் ஸௌராஷ்டிரர்களுக்கும் அன்வயிக்கப்பட்டு வருகிறது. ஆனால் நியாயமாய்ப் பார்க்கும்பக்ஷத்தில் தென் இந்தியாவிலுள்ள சேணியர்கள், கைக்கோளர்கள், தேவாங்கிகள், கத்திரிகள், பறயர்கள், செங்குடர்கள், முதலியார்கள், சாலியர்கள், செட்டிகள், பத்மசாலிகள், முதலிய நெசவுவகுப்புக்காரர்களுக்கெல்லாம் ஷை பெயர் பொருந்துமே அல்லாது எவ்விதமாயும் ஸௌராஷ்டிரர்களுக்குப்பொருந்தாது. ஸௌராஷ்டிரர்கள் இப்போது

வியாபாரசங்கத்தாராய்க் காணப்படுகிறார்கள். அவர்கள் தைரியம், வணக்கம், தெய்வபக்தி, ஆதிரவு, உத்ஸவ தமாஷ்களில் பிரியம் ஆகிய குணங்களுடையவர்கள்.

## மதம்.

(22) ஸௌர என்றால் சூரியன் என்று அர்த்தம். அதையொட்டி ஸௌராஷ்டரர்கள் ஆதியில் சூரியோபாஸ்திக்காரர்களாய் இருந்திருக்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள். ஸௌராஷ்டரர்கள் என்கிறபதத்துக்கு செழிப்பான ராஜ்ஜியத்தில் வசிப்பவர்கள் என்றர்த்தம். அவர்கள் இந்து மதஸ்தர்கள். அவர்கள் ஆதியில் மத்துவர்கள். தென்னிந்தியாவில் அவர்கள் குடியேறிய பிறகு சிலர் சங்கராசாரியார், இராமானுஜாசாரியார் இவர்களுடைய பிரசங்கங்களைக்கேட்டு சைவர்களாயும் வைஷ்ணவர்களாயும் மாறிவிட்டார்கள். ஸௌராஷ்டிரர்கள் அக்ஷோபிய சங்கராசாரியார் மடத்தைச்சேர்ந்தவர்கள்.

(23) சென்னைராஜதானியில் வசிக்கும் ஸௌராஷ்டிரர்களின் சங்கியை சுமார் லெட்சத்திநாலாயிரம். அவர்கள் வசிக்கும் ஸ்தலங்களாவன:—

௧. மதுரை, பரமகுடி, திண்டுகல், பெரியகுளம், பழனி, செலிகோட, வத்தலகுண்டு, சிவகங்கை, இராமனாதபுரம், ஆக ஜனங்கள் 50,000.

௨. திருநெல்வேலி, பாளையம்கோட்டை, நத்தீசனி, வீரவநல்லூர், விளாங்குடி, புதுக்குடி, கோட்டார். ஆக ஜனங்கள் 3,000.

௩. திருச்சிராப்பள்ளி, ஒறையூர், திருவரங்கம், புத்தூர், புதுக்கோட்டை, இலுப்பூர் ஆக ஜனங்கள் 15,000.

௪. தஞ்சாவூர், கும்பகோணம், அய்யம்பேட்டை, அம்மாபேட்டை, புவனகிரி, பாசிநகடை, ஆலலூர், நாகபட்டணம் ஆக ஜனங்கள் 20,000.

௫. சேலம், செவ்வாபேட்டை, ராசிபுரம், நாமக்கல், பரமதி, பெங்களூர், சகலேசபுரம், முதலான மைசூர் ராஜ்யத்திலும. ஆக ஜனங்கள் 8, 000.

௬. புதுச்சேரி, கூடலூர், முதலிய இடங்களிலும். 1000.

௭. வாலாஜாப்பேட்டை, வேலூர், குடியாத்தம, ஆறணி, நகிரி, நாராணவனம, திருப்பதி. ஆக ஜனங்ள் 5,000

௮. சென்னப்பட்டணம், காஞ்சீபுரம் முதலான இடங்களிலும் ஆக ஜனங்கள் 2,000. ஆகமொத்தத்துக்கு இலக்ஷத்தி நாலாயிரம் ஜனங்களுக்கதிகமாகவே யிருக்கிறார்கள்.

(24) இந்தியாவிலுள்ள மற்ற பெரும் வகுப்பாரைப்போலவே ஸௌராஷ்டரர்களிலும் பிரம்ம, க்ஷத்திரி, வைசிய, சூத்திரர்கள் என்று நான்கு பிரிவுகள் உண்டு. வைசிய சூத்திரர்கள் ஏறக்குறைய எல்லா பட்டணங்களிலும் கிராமங்களிலும் முக்கியமாய் திருப்பதி, நகரி, நாராணவனம், ஆரணி, கோட்டா, பழனி, பாளயம்கோட்டை, விளாங்குடி, வீரவநல்லூர் இந்த இடங்களிலும் வசிக்கிறார்கள். ஷை வகுப்பார் அனைவரும் பணக்காராகளல்ல, அவர்களுக்குள் படிப்பு மட்டுத்தான். ஆனால் ஸௌராஷ்டிர வித்தியாபிவிருத்தி சங்கங்களால் ஸ்வல்ப படிப்பு அவர்களுக்கு சொல்லுவிக்க பிரயத்தனங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. ஸௌராஷ்டிர பாடசாலை ஒன்று மதுரையில் ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டு நன்றாய்நடந்துகொண்டு வருகிறது.